# நெஞ்சு வலி என்றாலே அறுவைச் சிகிச்சை தேவை இல்லை!

**சென்னை, அக். 8:** ஒருவர் நெஞ்சு வலிக்கு சிகிச்சை பெற வந்த உடனேயே, பை - பாஸ் அறுவைச் சிகிச்சை செய்வது சரி அல்ல என்று நியோமெட் மருத்துவமனையின் தலைமை மருத்துவ ஆலோசகர் டாக்டர் எல். சிவபாலன் கூறினார்.

இதய ரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பை நீக்கும் 'கிலேஷன்', 'இஇசிபி', 'இஎஸ் எம்ஆர்' ஆகிய அறுவைச் சிகிச்சை அல்லாத சிகிச்சை முறைகள் குறித்து டாக்டர் சிவபாலன், இதய மருத்துவ நிபுணர் டி. ஸ்ரீகாந்த் ஆகியோர் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:-

"ஒருவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டு மருத்துவமனைக்குச் சென்றவுடன் இதய மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. தொடர்ந்து ஆஞ்சியோகிராம் பரிசோதனை செய்யப்படுகிறது. இதையடுத்து இதய கரோனரி ரத்தக் குழாய்களில் உள்ள அடைப்பின் தன்மையைப் பொருத்து ஆஞ்சியோபிளாஸ்ட்டி அல்லது பை - பாஸ் அறுவைச் சிகிச்சை செய்வது வழக்கமாக உள்ளது.

ஆனால் ஆஞ்சியோகிராம் பரிசோதனை மூலம் இதயத் தசைகளுக்குச் செல்லும் ரத்தத்தின் அளவைக் கணிக்க முடியாது. மேலும் இதயத்தில் உள்ள சிறு சிறு ரத்தக் குழாய்களின் அடைப்பு குறித்தும் தெரிய வருவதில்லை.

சென்னை அண்ணாநகரில் உள்ள நியோமெட் மருத்துவமனையில் அலோபதி மருத்துவ முறை அடிப்படையில் அறுவைச் சிகிச்சை அல்லாத சிகிச்சை முறைகளில் இதய ரத்தக் குழாய்களில் உள்ள அடைப்பு நீக்கப்படுகிறது.



இதய ரத்தக் குழாயில் அடைப்பு உள்ள நோயாளிக்கு நவீன 'இஸ்எம்ஆர்' சிகிச்சையை அளிக்கும் சென்னை அண்ணா நகர் நியோமெட் மருத்துவமனையின் தலைமை மருத்துவ ஆலோசகர் டாக்டர் எல். சிவபாலன். உடன் இதய மருத்துவ நிபுணர் டி. ஸ்ரீகாந்த்.

இதய ரத்தக் குழாய் அடைப்பு மற்றும் இதயத்துக்குச் செல்லும் ரத்தத்தின் அளவைக் கண்டறியும் 3-டி கார்ட்டோகிராம் சோதனை செய்யப்படும். இந்தச் சோதனைக்கு ரூ.4,000 செலவாகும்.

இதைத் தொடர்ந்து இதய ரத்தக் குழாய் அடைப்பின் தன்மைக்கு ஏற்ப மருத்துவமனையில் தங்கத் தேவையில்லாத 'கீலேஷன்' அல்லது 'இஇசிபி' அல்லது 'இஎஸ்எம்ஆர்' ஆகிய அறுவை இல்லாத சிகிச்சைகள் அளிக்கப்படும். கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில் 'இஇசிபி' சிகிச்சை சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**நவீன 'இஎஸ்எம்ஆர்' சிகிச்சை:** இதில் இந்தியாவிலேயே முதன்முறையாக இதய ரத்தக் குழாய் அடைப்பை நீக்கும் நவீன 'இஎஸ்எம்ஆர்' சிகிச்சை, நியோமெட் மருத்துவமனையில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இதயத் தசைகளில் ஒலி அதிர்வலைகளை நேரடியாகச் செலுத்தி இந்த நவீன 'இஎஸ்எம்ஆர்' சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த நவீன சிகிச்சையை அளிக்கும்போது நோயாளிக்கு எந்தவித மயக்க மருந்தும் அளிக்கப்பட மாட்டாது.

புற நோயாளியாக, மொத்தம் ஒன்பது தவணைகள் இந்த நவீன சிகிச்சையை அளித்த பிறகு, ஆறு மாதம் கழித்து இதயத்தில் புதிய ரத்தக் குழாய்கள் உருவாகி ரத்த ஓட்டம் சீராகும். சிகிச்சையை பெறத் தொடங்கிய சில தவணைகளிலேயே, நோயாளிக்கு ஏற்பட்ட மூச்சுத் திணறல் உள்ளிட்ட அறிகுறிகள் மறையத் தொடங்கி விடும். இந்த நவீன சிகிச்சை மூலம் இதுவரை 17 பேர் பலன் அடைந்துள்ளனர்" என்றார் டாக்டர் சிவபாலன்.

மேலே குறிப்பிட்ட நவீன சிகிச்சைகள் மூலம் தாங்கள் பலன் அடைந்ததை அன்புகாந்தன் (26), ரபீந்திரநாத் (58), ஏ. முருகேசன் (60) ஆகியோர் செய்தியாளர்களிடம் விளக்கினர்.